2. சிறப்புக் கவன ஈர்ப்பு

(அ) கரும்பு, பால் கொள்முதல் விலையை உயர்த்தப் போராடிய விவசாயிகள் கைது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி.கே. மணி, என்ன? (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரும்பு விலையை நிர்ணயிக்க முத்தரப்பு பேச்சுவார்த்தை வேண்டும். கரும்பு விலையை நிர்ணயம் செய்ய வேண்டும். பாலுக்கு கட்டுப்படியாகக்கூடிய விலை வேண்டும் என்று விவசாயிகள் நேற்று போராடுவதற்காகப் போராட்டம் துவங்கிய நேரத்தில், காவல் துறையால் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். இது விவசாயிகளினுடைய பிரச்சினை. ஆகவே, இதைக் கவனத்திலே எடுத்துக்கொண்டு அவர்களை விடுதலை செய்வதோடு, அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்ற அரசு முன்வருமா என்று கேட்டு, இப்பிரச்சினையைத் தங்களின் வாயிலாக அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

3. தகவல் கோரல்

(அ) குவைத் நாட்டில் உயிரிழந்தவர் உடலை தமிழகத்திற்குக் கொண்டு வருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஞானசேகரன். (குறுக்கீடு) திரு. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாமன்றத்தில் நேற்றையதினம் பேசிய அண்ணன் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் வெளிநாட்டில் வேலை செய்யக்கூடிய தமிழர்களுக்கு ஒரு நல வாரியம் வேண்டும் என்ற அடிப்படையிலே சில கருத்துகளைச் சொன்னார்கள். அந்தக் கருத்துகளை நான் முழுவதுமாக ஏற்றுக்கொள்ள விரும்புகிறேன். காரணம், என்னுடைய கடலூர் மாவட்டத்தில், பாஸ்கரன் என்ற ஒரு தமிழர் வெளிநாட்டிற்கு வேலைக்குச் சென்று அங்கு அவர் இறந்து, அந்த இறந்த செய்தியைக்கூட வெளிநாட்டில் இருக்கின்ற இந்திய தூதரகமோ அல்லது அந்த நிறுவனமோ அந்தக் குடும்பத்திற்குத் தெரிவிக்காமல்,

சத்யமேவ ஜெயதே TRUTH ALONE TRIUMPHS

2010 நவம்பர் 11] [திரு. தி. வேல்முருகன்]

4 மாதங்களாக அனாதைப் பிணமாக அந்த நாட்டிலே இருந்துகொண்டிருக்கிறது. அந்தப் பிணத்தைக் கொண்டுவருவதற்கான எல்லாவித முயற்சிகளையும் எடுத்து அந்தக் குடும்பம் மாவட்ட ஆட்சித் தலைவர் முதல், இந்த நாட்டில் இருக்கிற அனைத்து அதிகாரிகளுக்கும் மனு அனுப்பியும் இதுவரையில் அந்தப் பிணம் தமிழகத்திற்குக் கொண்டுவரப்படாமல், இரண்டு பச்சைக் குழந்தைகளை வைத்துக்கொண்டு அந்தக் குடும்பம் தவித்துக்கொண்டிருக்கிறது.

இந்த நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையில் இருக்கின்றபோது, ஏற்கெனவே என்னுடைய தொகுதியில் இதுபோன்ற ஒரு சம்பவத்தை நான் இந்த அவையில் குறிப்பிட்டபோது, போர்க்கால அடிப்படையில் உடனடியாக முதலமைச்சர் அவர்களுடைய அலுவலகம் அதில் தலையிட்டு இறந்தவருடைய அந்த உடலைக் கொண்டுவந்தார்கள். அதேபோல் திரு. பாஸ்கரன் அவர்கள் உடல் 4 மாதங்களாக அங்கு குவைத் நாட்டிலே இருக்கின்ற ஒரு பகுதியிலேயே இப்போது அனாதைப் பிணமாக இருப்பதாக செய்தி அனுப்பப்பட்டிருக்கிறது. ஆதலால், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உடனடியாகத் தலையிட்டு அங்கே இறந்த அந்தத் தமிழர் பாஸ்கரன் உடலைத் தமிழகத்திற்குக் கொண்டுவர வேண்டும். அவருக்கு இரண்டு பச்சைக் குழந்தைகள் இருக்கின்றனர். அவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர், ஒன்று அந்த நிறுவனத்திடம் நம்முடைய தூதரகத்தின்மூலமாகப் பேசி ஏதாவது ஒரு தொகையைப் பெற்றுத் தர வேண்டும் அல்லது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய நிவாரண நிதியிலிருந்து அந்த இரண்டு குழந்தைகளை வைத்திருக்கிற அந்த விதவைத் தாய்க்கு உதவி செய்வதற்கு இந்த அரசு முன்வர வேண்டும் என்கிற அந்த வேண்டுகோளையும் வைத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

(ஆ) பாலாற்றின் குறுக்கே கணேசபுரத்தில் ஆந்திர அரசு அணை கட்டுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன். (குறுக்கீடு) திரு. அன்பழகன். (குறுக்கீடு) ஒத்திவைப்புத் தீர்மானம் என்றால் பிறகு எடுக்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. சி. ஞானசேகரன்.